www.tnschools.co.in

DPI

# காலாண்டுத் தேர்வு - 2013

**11 - ஆம் வகுப்பு** **தமிழ் முதல் தாள்** RATHNA

காலம் : 3.00 மணி செய்யுளும் - இலக்கணமும் மதிப்பெண்கள் : 100

பகுதி - அ

www.tnschools.co.in

**I பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஐந்து வரிகளின் மிகாது விடை தருக.** 4 X 2 = 8

1. புறநானூறு பற்றிக் குறிப்பு வரைக.
2. மலையினும் மாணப் பெரியது எது?
3. தத்தையின் யாழிசையால் நிகழ்ந்தன யாவை?
4. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களையுடையது? அவை யாவை?
5. பீலிபெய் சாகாடு உணர்த்தும் உண்மை யாது?
6. நிரம்பா நீளிடை எத்தகையது?

**II எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளில் விடை எழுதுக.** 3 X 4 = 12

7. இறைவனின் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளன யாவை?
8. வரையா மரபின் மாரி போல - உவமையை விளக்கிப் பொருளுடன் பொருத்துக.
9. ஒருவன் நாவடக்கம் பேணவேண்டும் என்பதைக் குறள் வழியே எடுத்துக்காட்டுக.
10. சீவகன் யாழின் பால் கண்ட குற்றங்கள் யாவை?
11. தத்தை சீவகற்குத் தோல்வியுற்றதை விளக்குக.

**III பின்வரும் வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் பத்து வரிகளில் விடை தருக.** 3 X 4 = 12

12. பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார்?
13. ஒப்புரவாளனது செல்வம் பயன்படு மாற்றினை விளக்குக.
14. பாம்பின் செயலும் அபூபக்கர் செய்கையும் யாவை?
15. ஆபூபக்கருக்குப் பெருமான் நஞ்சு தீர்த்தருளியது யாங்ஙனம்?
16. ஐங்குறுநூற்றுப் பாடலால் அறியவரும் உள்ளுறைப் பொருளைத் தெளிவுபடுத்துக.

**IV எவையேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில் விடை தருக.** 1 X 8 = 8

17. காலமறிதல் பற்றி வள்ளுவர் உரைப்பனவற்றை இருபது வரிகளில் விளக்கி வரைக.
18. செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை விளக்குக.
19. சீவகன் காந்தருவதத்தையை யாழ்ப் போட்டியில் வென்ற நிகழ்ச்சியைத் தொகுத்து வரைக.

**V பின்வரும் பாடல்களுள் ஒன்றிற்கு அடியில் கண்ட வினாக்களுக்கு விடை தருக.** 4 X 1 = 4

20. "கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே"
அ) இச்செய்யுட் பகுதி இடம் பெற்றுள்ள நூல் எது? ஆ) இச்செய்யுளின் ஆசிரியர் யார்?
இ) படைமயக்குறுதல் - பொருள் யாது? ஈ) இவ்வடிகள் உணர்த்தும் பொருள் யாது?

**(அல்லது)**

21. "தடங்கணாள் பணியினால் தானவ் வீணை யொன்றினை
நெடுங்கணாள் எழினியை நீக்கி யுய்த்து நீட்டினாள்"
அ) இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? ஆ) இப்பாடல் ஆசிரியர் யார்?
இ) தடங்கணாள் யார்? ஈ) இவ்வடிகள் உணர்த்தும் பொருள் யாது?

**VI பின்வரும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

22. நாட்டுவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையைச் சுட்டுக.
23. 'செறிவறிந்து' "எனத்தொடங்கும் குறளையும் "செயல்" என முடியும் குறளையும் எழுதுக 2 X2=4

**VII 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக.** 2 X 2 = 4

அ) கூட்டி ஆ) பொழிந்து இ) பணிதல்
ஈ) வாழ்வான் உ) ஒழிக ஊ) அடைத்தனர்

25. **கீழ்க்கோடிட்ட தொடர்களுள் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.** 3 X 2 = 6

அ) உரைகாலம் ஆ) கடா அ யானை இ) நுனிக்கொம்பர்
ஈ) சால மிகுத்து உ) தீந்தொடை ஊ) மதிமுகம்

26. **எவையேனும் இரண்டு புணர்ச்சி விதி தருக.** 2 X 2 = 4

அ) உறுமிடம் ஆ) ஐந்தடக்கல் இ) பூந்தொடை
ஈ) தெய்வப் பாவை உ) புரையற ஊ) செம்மலர்

27. **சான்றுடன் விளக்குக.** 4 X 1 = 4

பாலைத் திணை (அல்லது) பாடாண் திணை

28. ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்

பேரறி வாளன் திரு - இக்குறட்பாவில் பயின்று வரும் 4 X 1 = 4

அணியைச் சுட்டி விளக்குக. (அல்லது) வேற்றுமையணி (அல்லது) பிறிது மொழிதல் அணியை விளக்குக.

VIII **பொருத்துக.** 4 X 1 = 4

| **திணை** | | **ஆசிரியர்** |
|---|---|---|
| 29. மருதம் | - | ஓதலாந்தையார் |
| 30. நெய்தல் | - | ஓரம் போகியார் |
| 31. குறிஞ்சி | - | அம்மூவனார் |
| 32. பாலை | - | கபிலர் |

XI **உரிய விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 16 X 1 = 16

33. தாயுமானவர் ஆற்றிய பணி

அ) அமைச்சர் ஆ) படைத்தலைவர் இ) அரசுக் கணக்கர்

34. பாரதியார் மொழிபெயர்த்த நூல்

அ) இராமாயணம் ஆ) பாரதம் இ) கீதை

35. கான மஞ்ஞைக்குக் கலிங்கம் ஈந்தவன்

அ) பாரி ஆ) காரி இ) பேகன்

36. புறப்பாட்டு என்றழைக்கப்படும் நூல்

அ) அகநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) புறநானூறு

37. களிற்று யானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100 ஆ) 120 இ) 180

38. திருக்குறள் என்பது

அ) அடையடுத்த கருவியாகுபெயர் ஆ) பண்புப் பெயர் இ) அன்மொழித் தொகை

39. அறத்துப் பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 133 ஆ) 38 இ) 35

40. மணநூல் என்றழைக்கப்படுவது

அ) சிலம்பு ஆ) மணிமேகலை இ) சீவக சிந்தாமணி

41. சீவக சிந்தாமணியை இயற்றியவர்

அ) பாரதியார் ஆ) திருத்தக்க தேவர் இ) சீத்தலைச் சாத்தனார்

42. சிந்தாமணிக்கு உரை கண்டவர்?

அ) நச்சினார்க்கினியர் ஆ) பரிமேலழகர் இ) டாக்டர் மு.வ

4 உமறுப்புலவரின் ஆசிரியர்

அ) கடிகை முத்துப் புலவர் ஆ) வீரமாமுனிவர் இ) சீத்தலைச் சாத்தனார்

4 விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம்

அ) சீவக சிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) கலிங்கத்துப்பரணி

4 உமறுப்புலவரின் ஆசிரியர்

அ) கடிகைமுத்துப் புலவர் ஆ) வீரமாமுனிவர் இ) சீத்தலைச் சாத்தனார்

4 சின்னச் சீறா இயற்றியவர்

அ) உமறுப்புலவர் ஆ) பனு அகுமது மரைக்காயர் இ) அப்துல் காதர்

4 பணி, அரவு, உரகம் என்பதன் பொருள்

அ) விடம் ஆ) பாம்பு இ) சிங்கம்

4 விடமீட்ட படலம் காண்டத்தில் உள்ளது அ) விலாதத்துக் காண்டம்

ஆ) நுபுவ்வத்துக் காண்டம் இ) ஹிஜ்ரத்துக் காண்டம்

4 அணுவைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள் எனப் புகழ்ந்தவர்

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) ஔவையார்

X **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** 4 X 1 = 4

ஒன்றானுந் ............. பொருட்பய னுண்டாயின்

............... தாகி விடும்.

5 ஊருணி ............. தற்றே உலகவாம்

............. திரு.